சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை :- **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.நி.ம.எண்.03/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.2/2025**

ஜெயராணி .... மனுதாரர்/வாதி

**// எதிராக //**

1. தனம்
2. இந்திரா
3. மோகன்தாஸ்
4. முருகன்
5. சிங்காரம்

... எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 09.01.2026 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.இராதாகிருஷ்ணன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் அறிவிப்பை பெற்றுக்கொண்டும் நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல்4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.வெ.வரதராஜு,பி.எஸ்.சி.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனு சொத்தில் மனுதாரர்/வாதிக்கான 3 ல் 1 பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் மனுச் சொத்தில் எவ்வித கட்டுமான பணிகளும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:10 +0530

செய்யக்கூடாது என எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1,2ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம்: -**

(i) தான் மனுவில் மனுதாரர், தாவாவில் வாதி ஆவேன் என்றும், தானும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளும் உடன் பிறந்த சகோதர சகோதரிகள் ஆவோம் என்றும், மனுச் சொத்து ஆதியில் தனது தந்தை தாசபோயன் என்பவருக்கு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா மூலம் பாத்தியப்பட்டதாகும் என்றும், தாவா ச.எண்.64/9 எ-ல் மொத்தம் 2.06 ஏக்கர் நிலம் தனது தந்தைக்கு பாத்தியமாகும் என்றும், மேற்படி சொத்துக்களை தனது தந்தை தன்னுடனும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளுடனும் கூட்டாக அனுபவம் செய்துவந்து அவரது பெண் பிள்ளைகளான தனக்கும், எதிர்மனுதாரர்கள் /1,2 பிரதிவாதிகளுக்கும் தான் உயிருடன் இருக்கும் பொழுதே ஒரு ஆதரவு செய்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுச் சொத்தான 1.00 ஏக்கர் நிலத்தினை மட்டும் கடந்த 28.04.2010-ம் தேதி ஆவண எண்.2060/2010 என்ற எண்ணில் தனக்கும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கும் தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி அன்றே சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றும், மனுச் சர்வே எண்ணில் தானம்கொடுத்ததுபோக மீதமுள்ள நிலங்களும், மற்ற நிலங்களும் எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக பாகம் ஒதுக்கிவிட்டார் என்றும், ஆனால் தற்போதுவரை மனுச் சொத்திற்கான வருவாய் ஆவணம் தன் பெயரிலும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் பெயரிலும், தனது தந்தை இறந்த தாசபோயன் பெயரிலும் இருந்து வருகிறது என்றும்,



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.09 17:00:15 +0530

(ii) மனுச் சொத்தினை மேற்படி வீதம் அடைந்த தானும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளும் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்களை பெற்று நாளதுவரை அவர்களுக்குள் எவ்வித அறுதியிட்ட பாகப்பிரிவினையும் இன்றி கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றும், இவ்வாறிருக்கையில் தனது தந்தை கடந்த 2011-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் கடந்த 6 மாத காலமாக எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளின் பேச்சைக்கேட்டுக் கொண்டு மனுச் சொத்தின் விவசாய வேலைகளில் தன்னுடன் சரிவர ஒத்துழைக்காமலும், மனுச் சொத்தில் இருந்து வரும் வருவாயினை தனக்கு கணக்குகாட்டாமலும் இருந்துவந்ததால் தான் மனுச் சொத்து பொறுத்து பாகம் பிரித்துக்கொள்ளலாம் என எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளை கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இன்று நாளை என வீண் காலதாமதம் செய்து வந்தார்கள் என்றும்,

(iii) இதனால் தான் மனுச் சொத்தில் தனக்கு சேரவேண்டிய 3-ல் 1 பாகத்தை பிரித்து தனி ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டி பொதுவர்களுடன் கடந்த 15.12.2024-ம் தேதி எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளை நேரில் அணுகி கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் அவ்வாறு பாகம் பிரித்துக்கொடுக்க முடியாது என்றும், மனுச் சொத்தினை எதிர்மனுதார்கள் / 1,2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்கள் /3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்போவதாகவும் கூறினார்கள் என்றும், இவ்வாறிருக்கையில் எதிர்மனுதாரர்கள் / 3 முதல் 5 பிரதிவாதிகள் கடந்த 22.12.2024-ம் தேதி மனுச் சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுச் சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டுவதற்கான பணிகளை செய்ய முயற்சித்தார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளின் அக்கிரம செயலுக்கு எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயல்களை தான் ஊர்பொதுவர்கள் துணையுடன் தடுத்து நிறுத்தினேன் என்றும்,



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:19 +0530

ஆனால் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மனுச் சொத்தில் தனக்கான பாகத்தை கொடுக்க முடியாது என்றும், முடிந்தால் பாகம் பெற்றுக்கொள்ளட்டும் என்றும், மனுச் சொத்தில் வீடு கட்டாமல் விடமாட்டோம் என்றும் பௌரசம் கூறி சென்றுள்ளார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் /1 முதல் 5 பிரதிவாதிகளின் செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும் என்றும்,

(iv) மனுச் சொத்து தனக்கும், எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மனுச் சொத்தில் தனக்கு 3-ல் 1 பாகமும், எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளுக்கு தலா 3-ல் 1 பாகமும் பாத்தியமாகும் என்றும், முதல் நோக்கு வழக்கும், நிறைகோழின் வாய்ப்பு நலனும் தன் புறம்தான் உள்ளது என்றும், அவை எதிர்மனுதாரர்களுக்கு இல்லை என்றும், ஆகையால் கனம் கோர்ட்டாரவர்கள் தயவு கூர்ந்து மனுச் சொத்தில் தனக்கான 3-ல் 1 பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள் மனுச் சொத்தில் எவ்வித கட்டுமான பணிகளும் செய்யக்கூடாது என எதிர்மனுதாரர்கள் /1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்றும் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

3. **<u>3 ம் எதிர்மனுதாரர்/3 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 2,4,5 ம் எதிர்மனுதாரர்கள்/2,4,5 பிரதிவாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிலுரையின் சுருக்கம்: -</u>**

(i) எதிர்மனுதாரர்கள்/2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கிற்கான எதிர்வழக்குரையை இம்மனுவிற்கான எதிருரையாக ஏற்றுக்கொள்ள வேண்டி ஒரு குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு அது அனுமதிக்கப்பட்டது. வாதியின் வழக்கு பொய், மோசம், சட்டப்படியும், நியாயப்படியும் நிலைத்தக்கதல்ல. தள்ளுண்டு போகத்தக்கது. இந்த பிரதிவாதியால் ஏற்றுக் கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனைய வழக்குரையின் சங்கதிகளை வாதியே தகுந்த ஆதாரங்களுடன் நிரூபணம் செய்ய வேண்டியது. தாவா பாரா



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:23 +0530

3, 4, 5, 6 மற்றும் 7 ல் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை.

(ii) உண்மை சங்கதிகள் யாதெனில், தாவா சொத்துக்களும் இன்னும் இதர சொத்துக்களும் ஆதியில் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் பாட்டனாரான திம்மராயன் என்பவருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் பாட்டனாரான திம்மராயன் உயிருடன் இருக்கும் வரை தாவா சொத்துக்களையும், இன்னும் இதர சொத்துக்களையும் ஆண்டு அனுபவித்து வந்து எவ்விதமான ஆவணங்களையும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார். அவருடைய ஒரே வாரிசான வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை தாசபோயன் ஆவார். தாவா சொத்துக்களையும், இன்னும் இதர சொத்துக்களையும் அவரது தந்தைக்கு பின்னிட்டு வருவாய் ஆவணங்களை ஏற்படுத்தி சுவாதீன அனுபவம் செய்து கொண்டு வந்தார். அவருக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி மாரி அவருக்கு 1-ம் பிரதிவாதியும், 2-வது மனைவி சென்னம்மாள் அவருக்கு 2 முதல் 5 பிரதிவாதிகளும் வாரிசுகள் ஆவார்கள். இவர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து தாவா சொத்துக்களையும் இன்னும் இதர சொத்துக்களையும் அனுபவித்து வந்தார்கள். இந்த நிலையில் 1-ம் பிரதிவாதிக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பும், வாதிக்கு சுமார் 35 வருடங்களுக்கு முன்பும், 2-ம் பிரதிவாதிக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பும் தகுந்த சீர்வரிசை செய்து சீதனம் கொடுத்து வெவ்வேறு ஊர்களில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவரவர் கணவர் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். தாவா சொத்துக்களையும் இன்னும் இதர சொத்துக்களையும் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை மற்றும் ஊர் பெரியவர்களின் முன்னிலையில் வாய்மொழி பாகமாக 3,4,5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு அன்றைய நாள் முதல் 3,4,5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களையும் இன்னும் இதர சொத்துக்களையும் அவரவர் பாகங்களை தனித்தனியாக அனுபவித்து வருகின்றார். தாவா சொத்துக்களில் ஆதியில் இருந்த கூரை



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:27 +0530

வீட்டை நீக்கிவிட்டு 3,4,5 பிரதிவாதிகள அவரவர் பாகங்களில் 3,5 பிரதிவாதிகள் தார்சு வீட்டை கட்டியும், 5-ம் பிரதிவாதி அட்டை வீட்டை கட்டியும், மின் இணைப்பு பெற்றும், வீட்டு வரி ரசீது செலுத்தியும் கால காலமாக அனுபவித்து வருகிறார்கள். இந்த நிலையில் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை இறப்பதற்கு முன்னாள் சுமார் 5 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு 2 ஆண்டுகளாக சுயநினைவு இன்றி படுத்த படுக்கையாக மருத்துவமனைகளுக்கும், வீட்டிற்கும் அடிக்கடி அழைத்து சென்று மருத்துவம் பார்த்து வந்தார்கள். இந்த சூழ்நிலையை பயன்படுத்தி வாதி இப்பிரதிவாதிகளுக்கு தெரியாமல் தாவா சொத்தை மோசடியாக தானசெட்டில் மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளது இந்த தாவா தொடர்ந்த பிறகு தான் இப்பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது. இந்த ஆவணம் சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. வாதி தானசெட்டில்மெண்ட் படி எந்த காலத்திலும் சுவாதீனத்திலோ, அனுபவத்திலோ அல்லது கூட்டு சுவாதீனத்திலோ இருந்தது இல்லை. தானசெட்டில்மெண்ட் படி எவ்விதமான வருவாய் ஆவணங்களும் ஏற்படுத்தியதும் கிடையாது. இந்த தானசெட்டில் மெண்ட் பெயரளவில் எழுதப்பட்ட மோசடியான ஆவணமாகும். அப்படியே வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையான தாசபோயன் எழுதி கொடுக்கப்பட்டிருந்தாலும் அது சட்டப்படி தவறாகும். தாவா சொத்துக்களும் இன்னும் இதர சொத்துக்களும் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளே சட்டப்படியான வாரிசுகள் ஆகும். இந்த நிலையில் தாவா சொத்தை வாதிக்கு அவரது தந்தை எந்தவிதமான ஆவணங்களையும் எழுதிக் கொடுக்க சட்டப்படியாக உரிமை இல்லை.

(iii) வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் வயதுக்கு வந்த போஜர்கள் ஆவார்கள். அவர்களிடம் தாசபோயனின் வாரிசு என்ற முறையில் கையொப்பம் பெறாமல் வாதி பெற்றுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல. ரத்து செய்யத்தக்கதாகும். வாதி நல்ல நோக்கத்தின் அடிப்படையில்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.09 17:00:31 +0530

இவ்வழக்கை தொடராத நிலையிலும் தாவா சொத்துக்களில் விலைமதிப்பு மிக உயர்ந்துவிட்ட காரணத்தால் சொத்தை அபகரிக்க திட்டமிட்டு தீய நோக்கத்தின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கு என்பதால் நிலைக்கத்தக்கதல்ல. பின்னிட்டு செயல்படும் பட்சத்தில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவும், இப்பிரதிவாதிகள் தன் உரிமையை இதன் மூலம் இன்றே ரிசர்வ் செய்து கொள்கிறார்கள். வாதி கோரியுள்ள பரிகாரங்கள் எந்த நிலையிலும் அடைய அருகதை அற்றவர். வாதி தொடர்ந்துள்ள வழக்கு எந்த ரீதியிலும் நிலைக்கத்தக்கதல்ல. வாதி வழக்கில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை. தாவாவில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் தவறானதாகும். தாவாவிற்கு தேவையான ஆவணங்களை வழக்கு விசாரணை காலங்களில் ஒப்படைவு செய்ய இப்பிரதிவாதிகள் தயாராக உள்ளார். ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து வாதியின் தாவாவை இப்பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்மனுதாரர் தனது எதிருரையில் கூறியுள்ளார்.

**4. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

**5.** மனு சொத்தில் மனுதாரரர்/வாதிக்கான 3 ல் 1 பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் மனுச் சொத்தில் எவ்வித கட்டுமான பணிகளும் செய்யக்கூடாது என எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1,2 ன் கீழ் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.** மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். எதிர்மனுதாரர்/பிரதிவாதி எதிருரையில் கண்டுள்ள



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:35 +0530

சங்கதிகளை குறிப்பிட்டு வாதிட்டார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனு, பிரமாண வாக்குமூலம், பதிலுரை, வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/வாதி தான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், மனுச் சொத்து ஆதியில் தனது தந்தை தாசபோயன் என்பவருக்கு நிலஉடமை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டா மூலம் பாத்தியப்பட்டதாகும் என்றும், தாவா ச.எண்.64/9 எ-ல் மொத்தம் 2.06 ஏக்கர் நிலம் தனது தந்தைக்கு பாத்தியமாகும் என்றும், மேற்படி சொத்துக்களை தனது தந்தை தன்னுடனும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளுடனும் கூட்டாக அனுபவம் செய்துவந்து அவரது பெண் பிள்ளைகளான தனக்கும், எதிர்மனுதாரர்கள் /1,2 பிரதிவாதிகளுக்கும் தான் உயிருடன் இருக்கும் பொழுதே ஒரு ஆதரவு செய்துவைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மனுச் சொத்தான 1.00 ஏக்கர் நிலத்தினை மட்டும் கடந்த 28.04.2010-ம் தேதி ஆவண எண்.2060/2010 என்ற எண்ணில் தனக்கும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கும் தானசெட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி அன்றே சுவாதீனம் கொடுத்துவிட்டார் என்றும், மனுச் சர்வே எண்ணில் தானம்கொடுத்ததுபோக மீதமுள்ள நிலங்களும், மற்ற நிலங்களும் எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக பாகம் ஒதுக்கிவிட்டார் என்றும், ஆனால் தற்போதுவரை மனுச் சொத்திற்கான வருவாய் ஆவணம் தன் பெயரிலும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் பெயரிலும், தனது தந்தை இறந்த தாசபோயன் பெயரிலும் இருந்து வருகிறது என்றும், மனுச் சொத்தினை மேற்படி வீதம் அடைந்த தானும், எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளும் அவர்கள் பெயரில் வருவாய் ஆவணங்களை பெற்று நாளதுவரை அவர்களுக்குள் எவ்வித அறுதியிட்ட பாகப்பிரிவினையும் இன்றி கூட்டாக அனுபவம் செய்து வருகிறோம் என்றும், இவ்வாறிருக்கையில் தனது தந்தை கடந்த 2011-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், இந்நிலையில் கடந்த 6 மாத காலமாக எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.09 17:00:39 +0530

எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளின் பேச்சைக்கேட்டுக் கொண்டு மனுச் சொத்தின் விவசாய வேலைகளில் தன்னுடன் சரிவர ஒத்துழைக்காமலும், மனுச் சொத்தில் இருந்து வரும் வருவாயினை தனக்கு கணக்குகாட்டாமலும் இருந்துவந்ததால் தான் மனுச் சொத்து பொறுத்து பாகம் பிரித்துக்கொள்ளலாம் என எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளை கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகள் இன்று நாளை என வீண் காலதாமதம் செய்து வந்தார்கள் என்றும்,

**7.** இதனால் தான் மனுச் சொத்தில் தனக்கு சேரவேண்டிய 3-ல் 1 பாகத்தை பிரித்து தனி ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டி பொதுவர்களுடன் கடந்த 15.12.2024-ம் தேதி எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளை நேரில் அணுகி கேட்டதற்கு எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் அவ்வாறு பாகம் பிரித்துக்கொடுக்க முடியாது என்றும், மனுச் சொத்தினை எதிர்மனுதார்கள் / 1,2 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்கள் /3 முதல் 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்யப்போவதாகவும் கூறினார்கள் என்றும், இவ்வாறிருக்கையில் எதிர்மனுதாரர்கள் / 3 முதல் 5 பிரதிவாதிகள் கடந்த 22.12.2024-ம் தேதி மனுச் சொத்தில் அத்துமீறி நுழைந்து மனுச் சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டுவதற்கான பணிகளை செய்ய முயற்சித்தார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள்/3 முதல் 5 பிரதிவாதிகளின் அக்கிரம செயலுக்கு எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளும் உறுதுணையாக இருந்து வருகிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயல்களை தான் ஊர்பொதுவர்கள் துணையுடன் தடுத்து நிறுத்தினேன் என்றும், ஆனால் எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள் மனுச் சொத்தில் தனக்கான பாகத்தை கொடுக்க முடியாது என்றும், முடிந்தால் பாகம் பெற்றுக்கொள்ளட்டும் என்றும், மனுச் சொத்தில் வீடு கட்டாமல் விடமாட்டோம் என்றும் பௌரசம் கூறி சென்றுள்ளார்கள் என்றும், எதிர்மனுதார்கள் /1 முதல் 5 பிரதிவாதிகளின் செயல் சட்டத்திற்கும், நியாயத்திற்கும் புறம்பானதாகும் என்றும், மனுச் சொத்து தனக்கும், எதிர்மனுதாரர்கள் / 1,2



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:43 +0530

பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தாகும் என்றும், மனுச் சொத்தில் தனக்கு 3-ல் 1 பாகமும், எதிர்மனுதாரர்கள் / 1,2 பிரதிவாதிகளுக்கு தலா 3-ல் 1 பாகமும் பாத்தியமாகும் என்றும், முதல் நோக்கு வழக்கும், நிறைகோழின் வாய்ப்பு நலனும் தன் புறம்தான் உள்ளது என்றும், அவை எதிர்மனுதாரர்களுக்கு இல்லை என்றும், ஆகையால் கனம் கோர்ட்டாரவர்கள் தயவு கூர்ந்து மனுச் சொத்தில் தனக்கான 3-ல் 1 பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள் / 1 முதல் 5 பிரதிவாதிகள் மனுச் சொத்தில் எவ்வித கட்டுமான பணிகளும் செய்யக்கூடாது என எதிர்மனுதாரர்கள் /1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்றும் மனுதாரர் தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ளது.

**8.** 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/2 முதல் 4 பிரதிவாதிகள் தனது எதிருரையில், தாவா சொத்துக்களும் இன்னும் இதர சொத்துக்களும் ஆதியில் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் பாட்டனாரான திம்மராயன் என்பவருக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்களாகும் என்றும், வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் பாட்டனாரான திம்மராயன் உயிருடன் இருக்கும் வரை தாவா சொத்துக்களையும், இன்னும் இதர சொத்துக்களையும் ஆண்டு அனுபவித்து வந்து எவ்விதமான ஆவணங்களையும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார் என்றும், அவருடைய ஒரே வாரிசான வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை தாசபோயன் ஆவார் என்றும், தாவா சொத்துக்களையும், இன்னும் இதர சொத்துக்களையும் அவரது தந்தைக்கு பின்னிட்டு வருவாய் ஆவணங்களை ஏற்படுத்தி சுவாதீன அனுபவம் செய்து கொண்டு வந்தார் என்றும், அவருக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி மாரி அவருக்கு 1-ம் பிரதிவாதியும், 2-வது மனைவி சென்னம்மாள் அவருக்கு 2 முதல் 5 பிரதிவாதிகளும் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இவர்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து தாவா சொத்துக்களையும்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:47 +0530

இன்னும் இதர சொத்துக்களையும் அனுபவித்து வந்தார்கள் என்றும், இந்த நிலையில் 1-ம் பிரதிவாதிக்கு சுமார் 50 வருடங்களுக்கு முன்பும், வாதிக்கு சுமார் 35 வருடங்களுக்கு முன்பும், 2-ம் பிரதிவாதிக்கு சுமார் 30 வருடங்களுக்கு முன்பும் தகுந்த சீர்வரிசை செய்து சீதனம் கொடுத்து வெவ்வேறு ஊர்களில் திருமணம் செய்து கொடுக்கப்பட்டு அவரவர் கணவர் குடும்பத்துடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றும், தாவா சொத்துக்களையும் இன்னும் இதர சொத்துக்களையும் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை மற்றும் ஊர் பெரியவர்களின் முன்னிலையில் வாய்மொழி பாகமாக 3,4,5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டு அன்றைய நாள் முதல் 3,4,5 பிரதிவாதிகள் தாவா சொத்துக்களையும் இன்னும் இதர சொத்துக்களையும் அவரவர் பாகங்களை தனித்தனியாக அனுபவித்து வருகின்றார் என்றும், தாவா சொத்துக்களில் ஆதியில் இருந்த கூரை வீட்டை நீக்கிவிட்டு 3,4,5 பிரதிவாதிகள அவரவர் பாகங்களில் 3,5 பிரதிவாதிகள் தார்சு வீட்டை கட்டியும், 5-ம் பிரதிவாதி அட்டை வீட்டை கட்டியும், மின் இணைப்பு பெற்றும், வீட்டு வரி ரசீது செலுத்தியும் கால காலமாக அனுபவித்து வருகிறார்கள் என்றும், இந்த நிலையில் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தை இறப்பதற்கு முன்னாள் சுமார் 5 ஆண்டுகளாக ஆஸ்துமா நோயினால் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு 2 ஆண்டுகளாக சுயநினைவு இன்றி படுத்த படுக்கையாக மருத்துவமனைகளுக்கும், வீட்டிற்கும் அடிக்கடி அழைத்து சென்று மருத்துவம் பார்த்து வந்தார்கள் என்றும், இந்த சூழ்நிலையை பயன்படுத்தி வாதி இப்பிரதிவாதிகளுக்கு தெரியாமல் தாவா சொத்தை மோசடியாக தானசெட்டில் மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியுள்ளது இந்த தாவா தொடர்ந்த பிறகு தான் இப்பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்றும், இந்த ஆவணம் சட்டப்படியம் நியாயப்படியம் செல்லத்தக்கதல்ல என்றும், வாதி தானசெட்டில்மெண்ட் படி எந்த காலத்திலும் சுவாதீனத்திலோ, அனுபவத்திலோ அல்லது கூட்டு சுவாதீனத்திலோ இருந்தது இல்லை என்றும், தானசெட்டில்மெண்ட் படி



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:52 +0530

எவ்விதமான வருவாய் ஆவணங்களும் ஏற்படுத்தியதும் கிடையாது என்றும், இந்த தானசெட்டில் மெண்ட் பெயரளவில் எழுதப்பட்ட மோசடியான ஆவணமாகும் என்றும், அப்படியே வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையான தாசபோயன் எழுதி கொடுக்கப்பட்டிருந்தாலும் அது சட்டப்படி தவறாகும் என்றும், தாவா சொத்துக்களும் இன்னும் இதர சொத்துக்களும் வாதி மற்றும் 1 முதல் 5 பிரதிவாதிகளே சட்டப்படியான வாரிசுகள் ஆகும் என்றும், இந்த நிலையில் தாவா சொத்தை வாதிக்கு அவரது தந்தை எந்தவிதமான ஆவணங்களையும் எழுதிக் கொடுக்க சட்டப்படியாக உரிமை இல்லை என்றும்,

**9.** வாதி தாவா சொத்தை கிரையம் பெற்ற காலத்தில் 1 முதல் 5 பிரதிவாதிகள் வயதுக்கு வந்த போஜர்கள் ஆவார்கள் என்றும், அவர்களிடம் தாசபோயனின் வாரிசு என்ற முறையில் கையொப்பம் பெறாமல் வாதி பெற்றுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லத்தக்கதல்ல, ரத்து செய்யத்தக்கதாகும் என்றும், வாதி நல்ல நோக்கத்தின் அடிப்படையில் இவ்வழக்கை தொடராத நிலையிலும் தாவா சொத்துக்களில் விலைமதிப்பு மிக உயர்ந்துவிட்ட காரணத்தால் சொத்தை அபகரிக்க திட்டமிட்டு தீய நோக்கத்தின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கு என்பதால் நிலைக்கத்தக்கதல்ல என்றும், பின்னிட்டு செயல்படும் பட்சத்தில் கூடுதல் பதிலுரை தாக்கல் செய்யவும், இப்பிரதிவாதிகள் தன் உரிமையை இதன் மூலம் இன்றே ரிசர்வ் செய்து கொள்கிறார்கள் என்றும், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் எந்த நிலையிலும் அடைய அருகதை அற்றவர் என்றும், வாதி தொடர்ந்துள்ள வழக்கு எந்த ரீதியிலும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், வாதி வழக்கில் சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றும், தாவாவில் குறிப்பிட்டுள்ள வழக்கு மூலம் தவறானதாகும் என்றும், தாவாவிற்கு தேவையான ஆவணங்களை வழக்கு விசாரணை காலங்களில் ஒப்படைவு செய்ய இப்பிரதிவாதிகள் தயாராக உள்ளார் என்றும், ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து வாதியின்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:55 +0530

தாவாவை இப்பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

10. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தானது மனுதாரர்/வாதிக்கும் 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் அவரது தந்தை 28.04.2010 ம் தேதியன்று தானசெட்டில்மெண்ட் செய்து வைத்ததன் மூலம் பெற்றதாகவும் அதில் மனுதாரர்/வாதிக்குள்ள உரிமையை கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாகப்பிரிவினை பத்திரமானது செல்லாது என்று எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனுவில் கோரியுள்ள இடைக்கால பரிகாரமானது மனு சொத்தில் 1 முதல்5 எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் எந்தவிதமான கட்டுமான பணிகளும் செய்யக்கூடாது என்று கூறப்பட்டுள்ளது. அவ்வாறு தாவா சொத்தில் கட்டுமான பணிகள் மேற்கொள்ளப்படுகிறது என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. நீதிமன்ற ஆணையரை நியமித்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டியும் மனுதாரர்/வாதி தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு இருக்கும்போது மனு சொத்தில் 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கட்டுமான பணிகளை மேற்கொள்கிறார்கள் என்று கூற முடியாது. 1 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பதிலுரையில் ஏற்கனவே தாவா சொத்தில் தார்சு வீடும் அட்டை வீடும் கட்டி அனுபவம் செய்து வருவதாக கூறியுள்ளார்கள். அவர்கள் கூறியுள்ளதுபோல ஏற்கனவே வீடு கட்டப்பட்டுள்ளதா? இல்லையா? என்பது முழு விசாரனைக்கு பிறகு தான் தெரியவரும். மனுதாரர்/வாதிக்குள்ள உரிமை எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளுக்கும் உரிமை உள்ளது. அவ்வாறான சூழ்நிலையில் உடன் உரிமையாளருக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோருவது



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2026.01.09 17:00:59 +0530

ஏற்புடையதாக இல்லை. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,** மனு சொத்தில் மனுதாரர்/வாதிக்கான 3ல் 1 பாகத்தினை பிரித்துக்கொடுக்காமல் எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் மனுச் சொத்தில் எவ்வித கட்டுமான பணிகளும் செய்யக்கூடாது என எதிர்மனுதாரர்கள்/1 முதல் 5 பிரதிவாதிகள் பெயரில் இந்த வழக்கு முடிவடையும் வரையில் ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 09ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.09 17:01:03 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : -</u>

-- இல்லை --

R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2026.01.09 17:01:06 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.